**கவனிக்க.-** *05.01.2024 ஆந் திகதிய 2366 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) (தமிழ்மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2367 - 2024 ජනවාරි මස 12 වැනි සිකුරාදා - 2024.01.12

*2367 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 8 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 9 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, சனவரி மாதம் 19 ஆந்திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


7 - B82533 - 5403 (2024/01)

# பதவிகள் - வெற்றிடம்

## கண்டி மாநகர சபையில் ஊழியக் கொள்முதல் அடிப்படையில் GIS தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

*கண்டி மாநகர சபையில் சேவை அவசியத்தின் பேரில் ஊழியக் கொள்முதல் அடிப்படையில் GIS தொழில்நுட்ப சேவையை பெற்றுக் கொள்ள உரிய தகுதிகளை உடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் சேவையின் பெயரினை குறிப்பிட்டு 2024.02.02 ஆம் திகதிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, கண்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.*

GIS தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவை

| | |
|---|---|
| 01. கொள்முதல் செய்வதற்காக பரிந்துரைக்கப்படும் சேவை | GIS தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவை (ஊழியக் கொள்முதல் அடிப்படையில்) |
| 02. தினசரி கொடுப்பனவு | மாதமொன்றிற்கு ரூ. 50000.00 வீதம் (மாதத்தில் 21 நாட்கள் சேவையாற்றுவதற்காக) |
| 03. உடல்சார் தகைமைகள் | குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல்சார் மற்றும் உளவியல்சார் தகைமையைக்கொண்டவராக இருத்தல் வேண்டும். |
| 04. கல்வித் தகைமைகள் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து புவியியல் தொடர்பான சிறப்பு பட்டம் மற்றும் GIS மற்றும் Remote Sensing ஒரு பாடமாக கற்று சித்தி பெற்றிருத்தல். |
| 05. தொழிற் தகைமைகள் | GIS உத்தயோகத்தராக அரச செயற்திட்டமொன்றில் அல்லது திணைக்களமொன்றில் தரவுகளை கையாளுதல் தொடர்பான 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருந்தல். |
| 06. வேறு தகைமைகள் | (i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.<br>(ii) கடந்த 3 வருட காலப்பகுதிக்குள் கண்டி மா நகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவுடன் கூடியவராக மாத்திரம் இருத்தல் வேண்டும்.<br>(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யத் தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியில் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 07. வயதெல்லை | அனைத்து விண்ணப்பதாரிகளும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். |
| 08. தெரிவு செய்யப்படும் முறைமை | தகுதியுடைய விண்ணப்பதாரிகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படுவர்.<br>1. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளியின் அடிப்படையில் ஆட்ச்சேர்ப்புக்காக எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கு எண்ணிக்கையானோர் பிரயோகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்<br>2. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தி பெறும் அனைத்து விண்ணப்பதாரிகளும் பிரயோகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.<br>3. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் மற்றும் பிரயோகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் சேவைக்காக ஆட்ச்சேர்ப்பு செய்யப்படுவர்.<br>4. இந்த ஆட்சேர்ப்பு முற்றிலும் சேவை அவசியத்தின் பேரில் மாத்திரம் இடம் பெறுவதால் அரசாங்க சேவையில் எந்தவொரு நிரந்தர பதவியை கோருவதற்கும் இது உரித்துடையதல்ல.<br>5. சேவையை பெற்றுக்கொள்ளும் காலம் ஒரு வருடமாகும். சேவை அவசியத்தின் பேரில் கால நீடிப்பு மாநகர சபை ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும். |

குறிப்பு– இந்த சேவை பெறுகை தொடர்பான விண்ணப்பப் படிவங்களை கண்டி மாநகர சபை வலைத்தளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யத் தேவையான சகல தகைமைகளும் பூர்த்தி செய்திருப்பதோடு சேவையை பெற்றுக் கொள்ளல் தொடர்பான இறுதி முடிவு கண்டி மாநகர சபை ஆணையாளருக்குரித்தானதாகும். விண்ணப்பம் கோரிய பின்னரோ அல்லது விண்ணப்பம் கோரும் காலப்பகுதியிலோ அல்லது ஆட்சேர்ப்பு தாமதப்படுத்தல், மாற்றியமைத்தல், இந்த அறிவித்தலை நிராகரித்தல், இந்த அறிவித்தலில் மாற்றங்கள் செய்தல் தொடர்பான பூரண உரிமையும் கண்டி மாநகர சபை ஆணையாளருக்குரித்தானதாகும்.

கே. கே. ஜீ. ஐ. டீ. பீ. விஜேதிலக,
மாநகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

01 - 124

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## முலட்டியன பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதியாக பிரகடணப் படுத்துதல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 134 வது சரத்தின் (1) வது உப சரத்தின்படி பிரதேச சபைக் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக முலட்டியன பிரதேச சபையினால் 2021 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபை கூட்டத்தின் போது தீர்மான இலக்கம் இ. (18) இன் கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் பிரேரணை குறித்த சட்டவாக்கின் மேற் குறிப்பிடப்பட்ட உப சரத்தின் படி மாத்தறை மாவட்ட பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளரான சந்தன கே செனவிரத்ன ஆகிய என்னால் அங்கீகாரம் வழங்கப்பட்டது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சந்தன கே. செனவிரத்ன,
உதவி உள்ளூராட்சி ஆணையாளர்,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம்,
2023 நவெம்பர்.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 134 ஆவது சரத்தின் (1) வது உப சரத்தின்படி பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக முலட்டியன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பின்வரும் வரைபடத்திலும் அட்டவணையிலும் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள பகுதிகளுக்கு உச்ச மட்டத்திலான சேவைகளை விரிவுபடுத்துவதற்கு முலட்டியன பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ள படியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டு மென்றும், குறித்த ஏற்புதல் பிரேரணை உறுப்புரைக்கு மாத்தறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் இணக்கத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்றும் முலட்டியன பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் (முலட்டியன பிரதேச செயலக அலுவலர் பிரிவு) அமைந்துள்ள இலக்கம் 275 தெய்யந்தர கிராம அலுவலர் பிரிவும், 272 அ நெரலம்பிட்டிய 275 இ கல்எட்டம்ப 275 ஈ மடுவல கிராம அலுவலர் பிரிவுகளில் காணித் துண்டுகளினால் அமைந்த –

வடக்கு : ஓலான கால்வாயின் மத்திய கோடு மற்றும் ஹரத்த கும்புர கால்வாயின் மத்திய கோடு தொடும் புள்ளியில் (அலு கெட்டிய லேலிகட அருகிலிருந்து) ஆரம்பித்து ஹரத்த கும்புர கால்வாயின் மத்திய கோடு ஊடாக கிழக்கு மற்றும் வடக்கு திசையாக


வரையப்பட்ட கோடானது கலுகல தெனிய பொக்குன கிழக்கு எல்லையில் ஓடும் கலுகலதெனிய கால்வாயின் மத்திய கோடு தொடும் வரையிலும், அங்கிருந்து கிழக்கு திசையில் குறுக்காக வரையப்பட்ட நேர் கோட்டின் ஊடாக குறித்த கால்வாயின் இடது கரை வரையிலும் அங்கிருந்து குறித்த இடது கரை ஊடாக வடக்காக வரையப்பட்ட கோடானது கொஹிலகஹ தெனிய காணியின் தெற்கு எல்லை வரையிலும், அங்கிருந்து குறித்த காணியின் தெற்கு எல்லையூடாக கிழக்கு திசையே வரையப்பட்ட கோடானது தெய்யந்தர ஹந்துகல பாதையின் மத்திய கோட்டை தொடும் வரையிலும் அங்கிருந்து குறித்த பாதையின் மத்திய கோடு ஊடாக வடக்கு மற்றும் வடகிழக்கு திசையே வரையப்பட்ட கோடு 3/2 ஆம் இலக்க பிட்டஎல மதகின் மத்திய புள்ளி வரையிலும் அங்கிருந்து குறித்த கால்வாயின் மத்திய கோடு ஊடாக தென்கிழக்கே கிரம ஆரேயின் மத்தியகோட்டை சந்திக்கும் வரையிலும்.

கிழக்கு : கடைசியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து கிராம ஆரையின் மத்திய கோடு ஊடாக தென்கிழக்கு தெற்கு திசையாக வரையப்பட்டுள்ள கோடானது பண்டித்த போருவ பாலத்தின் (மஹ ஒகந்த பாலம்) மத்திய புள்ளி வரையிலும் அங்கிருந்து பண்டித்த போருவ பாதையின் (துங்ஹேன கிரிவெல்தெனிய பாதை) மத்திய கோடு ஊடாக கிழக்கு திசையே வரையப்பட்டுள்ள கோடானது தெய்யந்தர கிராம பாதையின் மத்திய கோடு தொடும் வரையிலும் (கொன்னகாவ) அங்கிருந்து குறித்த பாதையின் மத்திய கோடு ஊடாக தென்மேற்கு தெற்கு திசையே வரையப்பட்டுள்ள கோடானது 1.9 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள புள்ளிவரையிலும்.

தெற்கு : கடைசியாக குறிப்பிடப்பட்ட புள்ளியில் இருந்து தென்மேற்கு திசையாக வரைந்த கோடானது தெனகம முலட்டியன பாதையின் மத்திய கோடு வரையிலும் அங்கிருந்து அந்த பாதையின் மத்திய கோடு ஊடாக தெற்காக வரையப்படும் கோடானது 9/1 ஆம் இலக்க மதகின் (கோப்பிவத்த மதகு) மத்திய புள்ளி வரையிலும் அங்கிருந்து கோப்பி வத்த கால்வாயின் மத்திய கோடு ஊடாக தென்மேற்கு திசையாக வரையப்பட்ட கோடானது வேவெல பியத்த விலிருந்து பாயும் கிளை நதியின் மத்திய கோடு வரையிலும் அங்கிருந்து குறித்த கிளை நதியின் மத்திய கோடு ஊடாக வடக்காக வரையப்பட்ட கோடானது கிராம ஆரையின் மத்திய கோடுவரையிலும் அங்கிருந்து கிராம ஆரையின் மத்திய கோடு ஊடாக வடமேற்கு, மேற்கு தென்மேற்கு, வடக்கு மற்றும் மேற்கு திசையாக வரையப்பட்ட கோடானது சீனிபெல்ல பாலத்தின் மத்திய புள்ளி வரையிலும்.

மேற்கு: கடைசியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து கிராம ஆரையின் மத்திய கோடு ஊடாக வட மேற்கு திசையாக வரையப்பட்டுள்ள கோடானது ஒவிலான கால்வாயின் மத்திய கோட்டை தொடும் வரையினும், அங்கிருந்து குறித்த கால்வாயின் மத்திய கோடு ஊடாக வடக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்கு திசையாக வரையப்பட்ட கோடானது ஆரம்பப் புள்ளியை அடையும் வரையிலான எல்லைகளினால் சுற்றி வளைக்கப்பட்ட எல்லைக்குள் அமைந்துள்ள 2.35 சதுர கிலோமீட்டர் பரப்பளவை கொண்ட பகுதியாகும்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 134 ஆவது சரத்தின் (1) ஆவது உப சரத்தின்படி எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக 2021 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொதுச்சபை கூட்டத்தின் இலக்கம் இ(18) தீர்மானத்தின்படி மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கு இத்தால் ஒப்புதல் வழங்குகின்றேன்.


முலட்டியன பிரதேச சபை
N
W
E
S
1:11,463
கிரம ஆர
0 0.175 0.35 0.7 Km
பரப்பளவு - 2.35 சதுர கி.மீ

## ஏறாவூர் நகர சபை

பாதீடு தொடர்பான அறிவித்தல் - 2024

ஏறாவூர் நகரசபையின் 2024 ஆம் ஆண்டு பாதீடானது 1939 ஆம் ஆண்டில் நகராட்சி மன்ற 255 ஆம் அத்தியாயத்தில் 178 மற்றும் 179 ஆம் பிரிவிற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு 2023.12.28 ஆந் திகதி நிதிக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு EUC/FCM/2023/ Dee/09 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக எமது சபையின் பாதீடானது அலுவலக கருமபீடம், பொது வாசிகசாலை, விவேகாநந்தா வாசிகசாலை, சபைக்குரிய வலைத்தளங்கள் என்பவற்றில் 01.01.2024 முதல் பார்வையிடலாம் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான மேலதிக தகவலை ஏறாவூர் நகர சபைக்கு சமூகமளித்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். எச். எம். ஹமீம்,
விஷேட ஆணையாளர்,
ஏறாவூர் நகர சபை.

01 - 86

---

## விலங்கறு மனைக்கு உரிமம் ஒன்றை வழங்குதல் தொடர்பாக எதிர்ப்புகளை கோருதல்

இடம் : போவல்லை வீதி, எலஹில்லேவ வத்த, தனாகம, மாவனல்லை
விண்ணப்பதாரியின் பெயர் : திரு. எம். எம். அல்தாப்
விண்ணப்பதாரியின் முகவரி : போவல்லை வீதி, எலஹில்லேவ வத்த, தனாகம, மாவனல்லை

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரி 2023.09.04 ஆந் திகதி மாவனல்லை பிரதேச சபையின் செயலாளராகிய என்னிடம் விலங்கறு மனை ஒன்றை ஆரம்பிப்பதற்காக அனுமதி கோரியுள்ளார் 1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கசாப்புக் கடைகள் சட்டத்தின் 2(ஆ) இற்கு ஏற்ப விலங்கறு மனை நடாத்திச் செல்வதற்கு உரிமமொன்றை வழங்குதல் தொடர்பாக மாவனல்லை பிரதேசத்தில் வசிப்பவர்களிடம் எதிர்ப்புக்களை (பெயர் குறிப்பிடப்படாதவைகள் அல்லாத) சமர்ப்பிக்கலாம். குறித்த எதிர்ப்புக்களை எழுத்து மூலம், இரண்டு பிரதிகளாக இவ்வர்த்தமானி அறிவித்தல் திகதி முதல் 21 நாட்களுக்குள் எனக்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்தல் செய்கின்றேன்.

எஸ். பீ. ஆர். என். பியரத்ன,
செயலாளர் மற்றும் தத்துவங்கள், பணிகளை
செயற்படுத்தும் அலுவலர்,
மாவனல்லை பிரதேச சபை.

01 - 91

---

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

மாட்டிறைச்சிக்கடை/ஆட்டிறைச்சிக்கடை நடத்திச் செல்வதற்கென ஊன் வினைஞர் அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) உப பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல் - 2024

கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆட்கள் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மாட்டிறைச்சி/ ஆட்டிறைச்சிக் கடைகளை நடத்திச் செல்வதற்கென ஊன் வினைஞர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளனர் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் எதிர்ப்பதாயின், உரிய காரணங்களை எழுத்துமூலம் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 (பதினான்கு) நாட்களுக்குள் இரண்டு பிரதிகளில் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9(3) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் செயலாளர் மற்றும்
அதிகாரக் கருமங்களைச் செயற்படுத்தும் அலுவலர்

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை அலுவலகம்.
2024, சனவரி 02.

| தொடர் இலக்கம் | விண்ணப்பதாரியின் பெயர் | வர்த்தகம் செய்யுமிடம் | வர்த்தகத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | திருமதி எம்.எப்.பஸ்லியா | இல. 186/1, இனிகல வீதி, கட்டுகஸ்தோட்டை | மாட்டிறைச்சி விற்பனை நிலையம் |
| 02 | திரு.ஐ.எம். அஸன் | இல. 546, இனிகல, கட்டுகஸ்தோட்டை | மாட்டிறைச்சி விற்பனை நிலையம் |

01 - 98

---

**பலாங்கொடை நகர சபை**

பசுவதை கட்டளை சட்டத்தின் கீழ் அறிவித்தல்

இங்கு கீழ் கூறப்படும் துணை ஆவணங்கள் விவரமாக கூறப்பட்டுள்ள இடங்களில் பசுவதை வியாபாரம் மற்றும் இறைச்சி விற்பனை செய்வதற்கு 2024 வருடத்திற்கு உரிமங்கள் பெறுவதற்காக விண்ணப்பிக்க பட்டுள்ளது அதற்கமைய உரிமம் வழங்குவதற்கு பலாங்கொடை நகர சபை எல்லைக்குள் வாழும் யாராயினும் எதிர்ப்பு தெரிவிப்பதாயின், எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காரணத்தை இரண்டு பிரதிகளுடன் இவ் அறிவித்தல் வெளியிட்டு பதினான்கு (14) நாற்களுக்குள் என்க்கு எழுதுவதற்கு உங்களுக்கு அதிகாரம் உண்டு என்பதையும் இலங்கை நீதி சட்டம் 272 வது அதிகாரமான பசுவதை கட்டளை சட்டத்தின் 7 வது அதிகாரத்தின் கீழ் இதன் மூலம் அறியத்தருகிறேன்.

எஸ்.எச்.ஏ.கருணாரத்ன,
செயலாளர் மற்றும் அதிகார
செயற்பாடுகளை
நடைமுறைபடுத்தும் அதிகாரி
பலாங்கொடை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
பலாங்கொடை,
2023, திசெம்பர் 28.

**துணை ஆவணம் 01**

| தொடர் இலக்கம் | விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி | பசுவதை நிலைய முகவரி | ஊரிமம் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 01 | பலீல் மொஹமட் ரவுஸான் | பலாங்கொடை, கஹடபிடிய பாதை, மிரிஸ்வத்தை. வரி இல. 51:3 | 2024-01-01 முதல் 2024-12-31 வரை |

| தொடர் இலக்கம் | விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி | வியாபார நிலைய முகவரி | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | அப்துல் முன்தாலிப் மொஹமட் ரெம்சின் இல. 443, தெஹிகஸ்தலாவ. பலாங்கொடை | பொது விற்பனை நிலையம் இல. 15, ஆட்டிறைச்சிக்கடை | ஆட்டிறைச்சி விற்பனை |
| 02 | அப்துல் ரஷீட் மொஹமட் மிர்ஷாத் இல. 443, கல்தொட பாதை, பலா-ங்கொடை | பொது விற்பனை நிலையம் இல. 16, மாட்டிறைச்சிக்கடை | மாட்டிறைச்சி விற்பனை |

01 - 119

---

**கம்பஹா பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ‘ஆ’ வாசகத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ‘அ’ வாசகத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுத்து 24(1) ‘ஆ’ வாசகத்தின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் கம்பஹா பிரதேச சபைக்குரித்தான வீதிகள் என இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இவ்வீதிகள் அடையாளமிடப்பட்டுள்ளது ஏதேனும் இடமொன்றிற்குக் குறுக்காக அவ்விடத்தின் உரிமையாளராக அவ்விடத்துக்கு உரிமை கோரும் எவரேனும் ஆளொருவராயிருப்பின் அவர் இவ் அறிவித்தல் பிரசுரமாகிய தினத்திலிருந்து 01 மாத காலத்திற்குள் அவ்விடத்திற்கான தமது உரிமையை நிரூபிப்பதற்காக உரிய நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(2) வாசகத்தின பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு தரப்பட்ட கால எல்லைக்குள் எவ்வித எதிர்ப்பும் கிடைக்கப்பெறாததால் மேல் மாகாண கௌரவ ஆளுநரின் அனுமதியுடன் அவ் வீதிகள் பிரதேச சபை வீதிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது என மேலும் அறியத்தருகிறோம்.

எஸ். ஏ. எஸ். பீ. சுரவீர,
கம்பஹா பிரதேச சபை செயலாளர் மற்றும்,
அதிகாரம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்
என்பனவற்றை
செயற்படுத்தும் உத்தியோகத்தர்,
கம்பஹா பிரதேச சபை.

2023, திசெம்பர் 28.

**அட்டவணை**

| தொ. இல. | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் பெயர் | வீதியின் | | நீளம் (மீ) | அகலம் (மீ) | நிலஅளவையாளர் பெயர் | வரைபட இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்பம் | முடிவு | | | | |
| 01 | 218/A மாகெவிட்ட வடக்கு | மாகெவிட்ட ஜுபிலி மாவத்த | 201 கம்பஹா- ஜாஎல பிரதான வீதி | அணைக் கட்டுக்கு அருகாமையில் | 0.740 | 2.88 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் சர்வே | GPS-024 2023/02/06 |
| 02 | 216/B திப்படுகொட | திப்படுகொட கெமுனு மாவத்த | 278 ஜாஎல கனேமுல்ல பிரதான வீதி | ஊருவல் ஓய அணைக் கட்டுக்கு அருகில் | 0.629 | 2.71 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் சர்வே | GPS-025 2023/02/06 |
| 03 | 242/C எம்பரலுவ தெற்கு | எம்பரலுவ சிங்ஹ மாவத்த | எம்பரலுவ சனசமூக நிலையம் அருகில் | இத்தேகல வீதி | 1.209 | 3.73 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட போ இன்ஜினியரின் சர்வே | G P S - 2 6 2023/02/06 |
| 04 | 236/B கனேமுல்ல தெற்கு | கனேமுல்ல துத்திரிஹேன பண்ணை வீதி | சுமேத மாவத்த | சீலாநந்த கனிஷ்ட வித்தியாலயம் | 0.691 | 3.53 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் சர்வே | GPS-027 2023/02/06 |
| 05 | 236 மாஹேன 236 அமுனு கொட கிழக்கு | அமுனுகொட பெரகும் மாவத்த | அமுனு கொட ராஜமஹா விஹாரய அருகில் | கீழ் யாகொட வீதி (ட்ரெக்மோ வீதி) | 1.153 | 3.31 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட போ இன்ஜினியரின் சர்வே | GPS-028 2023/02/06 |
| 06 | 243 கீழ் இம்புலகொட கிழக்கு | இம்புல்கொட எம்.என்.எஸ்.எஸ். பெரேரா மாவத்த | எம்பரலுவ வீதி, (514 வழி) | படைவீரர் ஜகத வசந்த மாவத்த | 0.978 | 2.71 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் | GPS-029 2023/02/06 |
| 07 | 239 பெலும்மஹர 235/C மேல் யாகொட தெற்கு | பெலும்மஹர கொஸ்வத்த வீதி | சேருவிலா வீதி வங்கிக்கு அருகில் | மேல் யாகொட வீதி பேக்கரி கடை வரை | 0.884 | 2.70 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் சர்வே | GPS-030 2023/02/06 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் பெயர் | வீதியின் | | நீளம் (மீ) | அகலம் (மீ) | நிலஅளவையாளர் பெயர் | வரைபட இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்பம் | முடிவு | | | | |
| 08 | 237/B மேற்கு கொஸ் ஸின்ன I வடக்கு 237/B மேற்கு கொஸ் ஸின்ன II 244/C கொஸ் ஸின்ன கிழக்கு I 237/D கட்டுவாவ முல்ல தெற்கு | கட்டுவாவமுல்ல வீதி | கொஸ்ஸின்ன ரஜ மஹா விஹாரய அருகில் | ஹெட்டிகந்த வீதி முடிவில் | 1.550 | 4.26 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் சர்வே | GPS-032 2023/02/06 |
| 09 | 235 ஒருதொட்ட வடக்கு | கோட்டெகாட வீதி | யாகொட புதிய வீதி | யாகொட புகையிரத நிலையம் அருகில் | 1.228 | 3.34 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் சர்வே | GPS-032 2023/02/06 |
| 10 | 237 கொஸ் ஸின்ன கிழக்கு | பெரஹர மாவத்த | 214 பஸ் மார்க்கம் (களுவல வீதி) | சூர்ய மாவத்த | 0.790 | 3.43 | வீ.ஷம்முகநாதன் கொழும்பு இன்ஸ்டிடியூட் போ இன்ஜினியரின் சர்வே | GPS-033 2023/02/06 |

01 - 120